பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 28 திங்கட்கிழமை 13.09.2021 கதிர் 312

### இனி இது ரகசியம் அல்ல!

'விதியே, விதியே தமிழ்ச் சாதியை, என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ?' – என்று தம் மனத்துக்குள் நொந்து கொண்டார் மகாகவி பாரதியார்.

அவரின் நூற்றாண்டு நினைவு சமயத்தில் அப்படி மனம் நோகும் நினையில்தான்

பக்கம்02 »

# இலங்கையின் போக்கு மாற்றத்தை இன்று வரவேற்பார் ஐ.நா.ஆணையர்

## அதனைச் செயலில் காட்ட வற்புறுத்துவார்



ஜெனிவா, செப்ரெம்பர் 13

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் புதிய கூட்டத் தொடரை இன்று காலை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சலி பச்சலெட் அம்மையார், தமது உரையில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை இன்று பிரதிபலிக்கமாட்டார். மாறாக, ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் இலங்கையின் போக்கு மாற்றத்தை வரவேற்கும் அவர், அந்த மாற்றத்துக்கு ஏற்ப காரியங்களைச் செயலில் காட்டும்படி கொழும்பைக் கோருவார் என ஜெனிவா வட்டாரங்கள் தெரிவித்தன.

☞10

## சம்பந்தனின் கடிதத்தின் முக்கிய இரு விடயங்களை கவனத்தில் எடுத்தார் மனித உரிமைகள் ஆணையர்!



ஜெனிவா, செப்.13

இலங்கை விவகாரத்தின் ஆகப் பிந்திய இரு நிலைமைகள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமது கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலி பச்சலெட் அம்மையார் கவனத்தில் எடுத்திருக்கின்றார்.

இவ்விடயத்தை ஒட்டி ஜெனிவாவில் உள்ள ஆணையாளரின் அலுவலகத்துடன் நேற்று கூட்டமைப்பின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தொடர்பு கொண்ட போதே இவ்விவரம் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

☞2

## கொட்டடி ஆலய வாயிலில் விழுந்து மூதாட்டி மரணம்

### சடலம் பரிசோதனைக்காக யாழ்.வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

வல்வெட்டித்துறையில் இருந்து கொட்டடியில் உள்ள ஆலயத்துக்கு வந்த மூதாட்டி ஒருவர் ஆலய வாயிலிலேயே சரிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

ஸ்ரீராஜேந்திரா சந்திரவதனா (வயது 68) என்னும் நெடியகாடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

இவரது உடலம் பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

☞2

## யாழில் பால் விற்பனையாளர் மோ.சைக்கிள் மோதி மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ். நகரில் பால் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த முதியவர் ஒருவர், அவரின் வீட்டு வாசலில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சின்னத்தம்பி சாந்தகுணமூர்த்தி (வயது 67) என்னும் யாழ்., பொம்மைவெளியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சைக்கிளில் பால் விற்பனையில் ஈடுபட்டு வந்த

☞2

## 2,641 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 641 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர

☞2

## நாட்டில் மேலும் 144 பேரை பலியெடுத்த கொரோனா

இலங்கையில் மேலும் 144 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பலியாகியுள்ளனர்.

77 ஆண்களும், 67 பெண்களும் நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் 30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவர் அடங்குகின்றார்.

அதேவேளை, 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 16 ஆண்களும், 5 பெண்களுமாக என மொத்தமாக 21 பேர் சாவடைந்துள்ளனர்.

இதனிடையே 60 வயதுக்கு மேற்பட்ட 122 பேரின் சாவுகள் பதிவாகியுள்ளன. அவர்களில் 61 ஆண்களும், 61 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய,

☞2

## பிரகாஷின் திருவுருவப்படத்துக்கு சுமந்திரன், சாணக்கியன் அஞ்சலி





(ந.லோகதயாளன்)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி அண்மையில் காலமான இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷின் திருவுருவப்படத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் நேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

☞2

## கிளிநொச்சியில் மரணித்த இருவருக்குக் கொரோனா!

கிளிநொச்சியில் நேற்று உயிரிழந்த இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்கள் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சண்முகம் ஆசை (வயது 94), வைரவன் பாக்கியம் (வயது 84) ஆகியோரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களாவர்.

## கடலட்டை பிடிக்க கடலில் இறங்கிய மீனவர் மாயம்

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, குடாரப்பு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்காக கடலில் இறங்கிய மீனவர் ஒருவரைக் காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் குறித்த மீனவர் படகில் சென்று கடலட்டைப் பிடிப்பதற்காகச் சிலிண்டருடன் கடலினுள் இறங்கியுள்ளார்.

குறிப்பிட்ட நேரத்தின்

☞10

## யாழில் மேலுமொரு கர்ப்பிணிப் பெண் கொரோனாத் தொற்றால் பரிதாபச் சாவு

(ந.லோகதயாளன்)

கொரோனா காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பவதி சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 36 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

குறித்த கர்ப்பவதி காய்ச்சல் காரணமாக கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று ஈழத்தமிழினம் நிற்கின்றது – அவர்களின் அரசியல் தலைவர்கள் செய்யும் திருகுதாளத்தைப் பார்த்து.

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்' என்பார்கள். நமது அரசியல்வாதிகள் பலரும் கேள்விச் செவியர்கள்தான். இரண்டு வகையில்; ஒன்று – அவர்கள் தேடி, வாசித்து அறிவதில்லை. மற்றையது பிற மொழி ஆற்றலின்மை. தமிழுக்கு அப்பால் குறைந்த பட்சம் ஆங்கிலத்தில் வருபவற்றைக் கூட வாசித்தறியும் விவரம் அவர்களுக்கு இல்லை.

ஆனால், தமிழ் சமூகம் – ஈழத் தமிழ்ச் சமூகம் கற்றறிந்தது. அறிவு சார்ந்த சமூகம் எம்மது என்று பீற்றிக் கொள்வோம்.

ஆனால் நாங்கள்தான் கேள்விச் செவியர், படித்தும் படிக்காதவர்களாக அலையும் முட்டாள்கள் என்று சொன்னால் மறுக்க முடியாத நிலைமை.

எங்கள் அரசியல்வாதிகளும் கேள்விச் செவியர்களாக எம்மை – மக்களை – வைத்துக் கொண்டுதான் அரசியல் செய்ய விழைகின்றார்கள். அது அவர்கள் தப்பு அல்ல. நம் தப்பு. படித்த நாங்கள், அவர்கள் வெறும் கேள்விச் செவியவர்கள்தான் – தமிழ்த் தேசியம் பற்றிய விடயத்தை வைத்துத் திருகுதாளம் பண்ணும் நடிப்பு சுதேசிகள்தான் – என்று தெரிந்து கொண்டும் நம் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தமைக்காக – அதற்குப் பரிசாக – அவர்கள் நிரந்தரமாக நம்மைக் கேள்விச் செவியர்களாக வைத்துக் கொண்டு அரசியல் நடத்துகின்றார்கள். அத்திறமைக்காக நாம் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

உதாரணத்துக்கு ஒரு விடயம். இப்போது ஜெனிவாவுக்கு – கூட்டமைப்பு சார்பில் – சம்பந்தன் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்தில், யுத்தக குற்றங்களுக்காக விடுதலைப் புலிகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்று சுமந்திரன் வரைந்து விட்டார் என்று குறிப்பிட்டு அவரையும், சம்பந்தனையும் கடிகடி என்று கடித்துக் குதறாத குறையாகப் பாய்ந்து விழுகின்றோம். வறுத்தெடுக்கின்றோம்.

இந்தக் குற்றச்சாட்டைத்தான் ஸ்ரீதரன் அணி முன்வைக்கின்றது. செல்வத்தாரும் முன்வைக்கின்றார் என்று தகவல். அவர்கள் அப்படிக் குற்றம் சுமத்துகின்றார்கள் என்ற பாணியில் தாக்குதலைத் தொடுக்கின்றார்கள் சுரேஷும் விக்கியும். அவர்கள் இருவரும் தாங்கள் நேரடியாக அப்படிக் குற்றம் சுமத்தவில்லை. ஏனெனில் இருவருக்கும் விடயம் புரியும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் ஆங்கிலம் நன்கு தெரியும். அதனா லோ என்னவோ வழமையாக சுமந்திரன் என்றதும் பாய்ந்தடிக்கும் அவர் இந்த விடயத்தில் அந்தக் குற்றச்சாட்டுப் பாய்ச்சலில் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை.

தாம் அப்படி புலிகளை விசாரிக்கும்படி எந்தக் கோரிக்கையும் அந்தக் கடிதத்தில் வைக்கவில்லை என்கிறார் சுமந்திரன்.

நிழல் யுத்தம் நடத்தும் முகநூல் போராளிகளும், மற்றையவர்களும் அப்படியானால் என்ன செய்ய வேண்டும்?

மேற்படி சுமந்திரனினால் தயாரிக்கப்பட்ட கடித நகலைத் தேடிப்பார்த்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் ஆங்கிலம் புரிந்தவர்களிடமாவது அந்தக் கடிதத்தைக் கொடுத்து அதன் மொழி பெயர்ப்பைப் பார்த்திருக்க வேண்டும்.

ஏனென்றால் நாங்கள் கேள்விச் செவியர்கள். கேள்விச் செவியர்களான சில அரசியல்வாதிகளைக் கண்மூடி ஆதரிக்கும் முட்டாள் தொண்டர்கள் அல்லது அடிமட்ட விசுவாசிகள்.

பிறகென்ன? வாயில் வந்ததைத் திட்டி, கையில் வந்ததை எழுதி, இல்லாத பொல்லாத அபவாதத்தைப் பரப்பி, முழுப் பொய்யை மெய்யாகக் காட்டுவதுதானே நம்மவர் வேலை? அது அரங்கேறுவதைப் பார்த்துத்தான் 'விதியே, விதியே' என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

சுமந்திரன் தயாரித்து, சம்பந்தன் ஒப்பமிட்டு அனுப்பியதாகக் கூறப்படும் கடிதத்தை நானும் பார்த்தேன். அதில் எங்கும் புலிகளை விசாரிக்கும் படி ஐ.நாவை சுமந்திரன் கேட்கவில்லை. இந்த விடயத்தை ஒட்டி அதிலிருந்த கருத்துகளின் சாரம் இதுதான்:-

*"ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ முன் நியமித்து நிபுணர் குழுவின் அறிக்கையின்படி –*

*"இலங்கை அரசினாலும் விடுதலைப் புலிகளாலும் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில் நம்பகரமான குற்றச்சாட்டுகள் தாராளமாக உள்ளன. அவை நிரூபிக்கப்படுமானால், பரந்த – மோசமான – அளவில் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்டவையாக அவை அமையும். அவற்றில் சில, யுத்தக் குற்றங்களாகவும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் கூட அமையக் கூடும்.*

*"பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு சர்வதேச தர நியமங்களுக்கு ஏற்றதாக இல்லை.*

*"இரு தரப்புகளினாலும் புரியப்பட்டவை எனக் கூறப்படும் மீறல்கள், குற்றச்சாட்டுகளை அரசு சரியாகக் கையாளவிட்டால் – பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை நிலைநாட்டும் விதத்தில் பொறுப்புக் கூறலை நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் – அது சர்வதேச சட்ட நியமங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு முரணானதாகும்.*

*"இலங்கையில் இரு தரப்புகளினாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய மோசமான குற்றங்கள் குறித்து விரிவான விசாரணை ஒன்றை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடத்துவதற்கான தீர்மானம் ஒன்றை 2014 மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றியது."*

– இவ்வளவும்தான் விசாரணையை பற்றிய விடயங்களாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அத்தோடு, 2015 தீர்மானத்தின்படி 36 உறுதிமொழிகளை இலங்கை அரசு ஜெனிவா கவுன்ஸிலுக்கு வழங்கியுள்ளது. ஜெனிவா அமர்வுக்கு இலங்கை வழங்கிய உறுதிமொழிகள் தொடர்பான பெறுபேற்றுக் காட்டியை சுயாதீன அமைப்பான 'வெரிட்டே ரிசேர்ச்' என்ற அமைப்பு தயாரித்துள்ளதாகத் தெரிவித்து, அந்த 36 உறுதிமொழிகளில் ஏழு மட்டுமே செய்யப்பட்டுள்ளன என அந்த அமைப்பின் முடிவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால், அதன் பெறுபேற்று சுட்டி அறிக்கையும் இணைப்பாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– இதில் எங்கேயும் புலிகளையும் சேர்த்து விசாரியுங்கள் என்று சுமந்திரனோ, சம்பந்தனோ தெரிவிக்கவேயில்லை.

இதைச் சுட்டிக்காட்டினால், அப்படியில்லை, இந்தக் கடிதத்தில் இந்த இடத்தில், இப்படி எழுதியிருக்கின்றது, உங்கள் கண்ணில் படவில்லையா என்று பதில் கேள்வி கேட்டால் அது நியாயம். அதை நாம் பிரசுரிப்போம்.

அதை விடுத்து நான் சுமந்திர புராணம் பாடுகிறேன் என வசைமாரி பொழிவதில் அர்த்தமில்லை. சுமந்திரன் பக்கத்தில் தவறுகள் இருக்கின்றன எனப்பட்டால் அவற்றையும் வெளிப்படையாக விமர்சிப்பேன். அப்படி விமர்சிக்க என்னிடம் பல விடயங்கள் உண்டு. வரும் நாள்களின் தொடர்வேன். காத்திருங்கள்.

ஆனால், புலிகளை – அவர்களின் அத்துமீறல்களை – சுமந்திரன் விசாரிக்கக் கோருகின்றார் என்று தமிழத் தேசியகத்தின் பெயரால் கதையளப்பது சுத்தமான சுத்துமாத்து. அப்படிச் சுமந்திரன் பக்கச் சார்பாக எழுதுவதால் நாங்கள் தனியான கடிதம் எழுதினோம், அனுப்பினோம், ஒப்பமிட்டோம் என்று கதையளப்பது கேள்விச் செவியர் வேலை.

(நீங்கள்)அப்படிச் செய்தமைக்கு வேறு காரணங்கள் இருந்தால் அவற்றை முன் வையுங்கள். விவாதிக்கலாம். கவனத்தில் எடுக்கலாம்; கவனத்தில் எடுக்க வேண்டும்.

எழுதாத ஒன்றை எழுதியதாகக் காட்டி, இலகுவில் தமிழ் மக்களை முட்டாள்களாக்குவது சுத்தப் பேமானித்தனமன்றி வேறில்லை.

தமிழரசுக்குள் – தமிழக் கூட்டமைப்புக்குள் – இன்னும் ஆழமான சுத்துமாத்துகள் உள்ளன. அவற்றை வரும் நாள்களில் பார்ப்போம்.

அதுபோலவே, இன்றைய பத்தி நீண்டு விட்டமையால் அமுல்பேபியின் அலப்பறை பற்றிய விடயமும் தள்ளிப்போகின்றது. மன்னியுங்கள்...!

– மின்னல் –

## யாழில் பால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த முதியவர் வழமை போன்று பால் வியாபாரத்துக்குச் சென்று வீட்டு வாசலில் வந்து இறங்கி சைக்கிளைத் திருப்பிய வேளை அராலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தார். அவர் உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

## சம்பந்தனின் கடித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு அதன் கீழ் பல அதிகாரங்களை எதேச்சாதிகாரமாகப் பிரயோகிக்கும் வலிமையை ஜனாதிபதி பெற்றிருக்கின்றார்.

அதேசமயம் –

கடந்த 30 ஆம் திகதி காணாமற்போனோருக்கான சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்பட்டமையை ஒட்டி நடைபெற்ற பகிரங்கக் கலந்துரையாடலில் கருத்துரை வழங்கிய நாட்டின் நீதி அமைச்சர் அலி சப்றி 'காணாமல்போனோர் விடயத்தில் குற்றம் ஒன்று இழைக்கப்பட்டிருக்குமானால் அது பற்றி விசாரிக்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தங்களுக்குத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வழிகாட்டியுள்ளார்.' – எனத் தெரிவித்திருந்தார். வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படமாட்டாது என்பதற்கான உறுதியுரையாக இது கருதப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இன்று ஆரம்பமாகும் 48ஆவது அமர்வுக்கு இரண்டு வாரங்களுக்கு உள்ளாக நடந்த விடயங்கள் இவை இரண்டும்.

கடைசி நேரத்தில் நடந்தமையால் இந்த விடயங்களும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இன்றைய உரைக்கான தயாரிப்பு நடவடிக்கைகளின் போது உள்வாங்கப்பட்டிருக்குமா என்ற சந்தேகம் நிலவியது. எனினும் சம்பந்தன் கடைசியாக அனுப்பிய கடிதத்தில் இந்த இரண்டு விடயங்களையும் விளக்கி, அவற்றை வெளிப்படுத்தியும் இருந்தார்.

சம்பந்தனின் கடிதம் கிடைத்ததா, அதன் உள்ளடக்கங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டனவா என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுமந்திரன் நேற்று விசாரித்தார்.

அப்போதே கடிதம் கிடைத்தது, இந்த இரண்டு விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டன என்ற தகவல் சுமந்திரனுக்கு ஆணையாளரின் அலுவலகத்தினால் தெரியப்படுத்தப்பட்டது என அறியவந்தது.

## நாட்டில் மேலும் 144...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 296 ஆக அதிகரித்துள்ளது.

## கொட்டடி ஆலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவரது மரண விசாரணையைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## பிரகாஷின் திருவுருவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்., தென்மராட்சி, வெள்ளாம்போக்கட்டியிலுள்ள பிரகாஷின் வீட்டுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அன்னாரின் திருவுருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தியதுடன் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து ஆறுதலும் கூறினர்.

மாற்றுத்திறனாளியான இளம் ஊடகவியலாளர் பிரகாஷ் தசையழிவு நோய்த் தாக்கத்தால் சக்கரநாற்காலியின் துணையோடு இயங்கிய நிலையிலும், தனது திறமையாலும் எழுத்தாற்றலாலும் எல்லோரது கவனத்தையும் ஈர்த்த ஒருவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2, 641 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 85 ஆயிரத்து 302 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,579 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 812 ஆக உயர்வடைந்துள்ளது.






# நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி அத்தியாவசியமானது

## விசேட வைத்திய நிபுணர் ரஜீவ டி சில்வா தெரிவிப்பு

புற்றுநோய், தீவிர எச்.ஐ.வி. நோய், நீரிழிவு உள்ளிட்ட பாரதூரமான நோய்களால் பாதிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு எந்தவொரு தடுப்பூசியையும் முதற்கட்டமாக பெற்றுக்கொண்டதன் பின்னர், மூன்றாவது தடுப்பூசியையும் வழங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்று நோய் எதிர்ப்பு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ரஜீவ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் -

சில நோயாளர்களுக்கு அவர்களது உடலில் காணப்படுகின்ற நாட்பட்ட நோய் நிலைமைகளால் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாது. புற்றுநோய், தீவிர எச்.ஐ.வி. நோய் , நீரிழிவு உள்ளிட்ட பாரதூரமான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர்.

எனவே இவ்வாறானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையேனும் இரு கட்டங்களாகவும் பெற்றுக் கொண்டதன் பின்னர் மூன்றாம் கட்ட தடுப்பூசியையும் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும். அஸ்ட்ராஜெனெகா, மொடர்னா மற்றும் பைஸர் ஆகியவை மூன்றாம் கட்டமாக வழங்குவதற்கு பொருத் தமான தடுப்பூசிகள் ஆகும்.

எவ்வாறிருப்பினும் 6 மாதங்களின் பின்னர் இவர்களுக்கும் முதல் இரண்டு கட்டங்களாக பெற்றுக் கொண்ட அதே தடுப்பூசியை அல்லது பைஸர் , மொடர்னா மற்றும் அஸ்ட்ராஜெனெகா ஆகியவற்றில் ஏதேனுமொன்றை மூன்றாம் கட்டமாக வழங்குமாறும் பரிந்துரைக்கின்றோம். - என்றார்.

## சட்டவிரோதமாக மாடுகளை கடத்திச்சென்ற இருவர் கைது



வவுனியா, செப். 13

வவுனியா - குடாகச்சக்கொடிய பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாடுகளைக் கடத்திச் சென்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொறவப்பொத்தானையில் இருந்து வவுனியா நோக்கி வருகை தந்த கப் ரக வாகனத்தை குடாக் கச்சக்கொடிய பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் வழிமறித்து சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தினுள் சட்டவிரோதமான முறையில் மாடுகள் கடத்தி செல்லப்பட்டுள்ளமை தெரியவந்தது.

குறித்த வாகனத்திலிருந்த நபர்களைக் கைதுசெய்த விசேட அதிரடிப்படையினர் கடத்தலுக்குப் பயன்படுத்திய கப் ரக வாகனத்தையும் மாடுகளையும் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## விவசாய சமூகத்தினருக்கும் நாமலுக்கும் இடையிலான சந்திப்பில் அமைதியின்மை

பொலன்னறுவை மாவட்ட விவசாய சமூகத்தினருக்கும், விளையாட்டுத்துறை , இளைஞர் விவகாரம் மற்றும் அபிவிருத்தி மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிற்கும் இடையில் கடந்த சனிக்கிழமை பொலன்னறுவையில் இடம்பெற்ற பேச்சின் போது அமைதியற்ற தன்மை காணப்பட்டது.

விவசாயிகள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கடிதமொன்றை முன்வைத்தனர். இரு தரப்பினருக்கும் இடையிலான கருத்து பரிமாற்றத்தின் போது அமைதியற்ற தன்மை நிலவியது.

நெல்லின் விற்பனை விலை 60 ரூபாவாக அறிவித்துள்ளதால் தாம் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என விவசாயிகள் இதன் போது விசனம் தெரிவித்தனர்.


விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும். அனைத்துக் காரணிகளையும் ஆராய்ந்தே நெல்லின்விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டது. நாடு தற்போது எதிர் கொண்டுள்ள நிலையை அனைத்து தரப்பினரும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விவசாயிகளிடம் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் பிரச்சினைகளை குறிப்பிட்டுக் கொண்டு ஒரு சிலர் தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

விவசாயத்துறையில் கடந்த அரசாங்கம் செய்த தவறுகள் தற்போது திருத்தப்பட்டு விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளன என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்க இதன் போது குறிப்பிட்டார்.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 02 - 09 - 1937

மறைவு 10 - 09 - 2021

## அமரர் கந்தசாமி குலசிங்கம்

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கெருடாவில், தொண்டைமானாறு)**

**எமது பாடசாலை ஆசிரியர் திரு. குணசேகரம் மணிவண்ணன் அவர்களின் பாசமிகு பெரியப்பா திரு. கந்தசாமி குலசிங்கம் அவர்கள் 10-09-2021 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.**

**ஆசிரிய நண்பர்கள்,
மு/ குரவில் தமிழ் வித்தியாலயம்
குரவில், உடையார்கட்டு.**

## உள்ளாடைகளுக்கும் இனி சதொசவையே நாடவேண்டும் என்கிறார் அமைச்சர் பந்துல

இறக்குமதி செய்யப்படும் 623 அத்தியாவசியமற்ற பொருள்களின் உத்தரவாதத் தொகை அதிகரித்துள்ளமையால் உள்ளாடை பாவனைக்கு தட்டுப்பாடு ஏற்படாது. விலையும் அதிகரிக்கப்படாது. தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யும் உள்ளாடைகளை சதொச விற்பனை நிலையத்தின் ஊடாகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.



வர்த்தகத்துறை அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அந்நிய செலாவணியை வலுப்படுத்துவதற்காகவே இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியமற்ற 623 பொருள்களின் உத்தரவாத விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்படவில்லை. இறக்குமதியாளர்கள் முழு தொகையையும் ரூபா பெறுமதியில் வைப்பிலிட்ட பிறகு இறக்குமதி செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சாதாரணதொரு செயற்பாடாகும்.

இதனை எதிர்த்தரப்பினர் தங்களின் குறுகிய அரசியல் சேறு பூசல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் உள்ளாடைக்கு தட்டுப்பாடு ஏற்படப்போகிறது என சமூக வலைத்தளங்களிலும், ஊடக சந்திப்புக்களிலும் கீழ்த்தரமான முறையில் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறான வெறுக்கத்தக்க கருத்துக்கள் தேசிய மட்டத்திலான ஆடைத் தொழில் துறையை அவமதிப்பதாகக் காணப்படும். இலங்கையின் தைத்த ஆடைகளுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி நிலவுகிறது. தேசிய மட்டத்தில் தைக்கப்படும் உயர்தரமான ஆடைகளை குறைந்த விலையில் மக்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இலங்கையில் தயாரிக்கப்படும் உள்ளாடைகளுக்கு சர்வதேச சந்தையில் அதிக கேள்வி காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் நாட்டு மக்களின் பாவனைக்கு உள்ளாடை பற்றாக்குறை ஏற்படும் என்று குறிப்பிடும் கருத்துக்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கன.

நாட்டு மக்களின் பாவனைக்குத் தேவையான உள்ளாடைகள் போதுமான அளவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என பிரதான நிலை உள்ளாடை உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. எந்தக் காரணிகளுக்காகவும் உள்ளாடைக்கான தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்படாது. என்பதை வர்த்தகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன். சதொச விற்பனை நிலையம் ஊடாக உள்ளாடைகளை குறைந்த விலைக்கு விற்பனைசெய்ய எதிர்பார்த்துள்ளோம். - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பதுங்கலும் பாய்தலும்

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகின்றது.**

**காலையில், ஆரம்பத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலி பச்செலெட் அம்மையாரின் ஆரம்ப உரை இடம்பெறுகின்றது. இதற்கு முந்திய மார்ச் அமர்வில் – 46ஆவது கூட்டத் தொடரில் – இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றங்கள் குறித்த தமது அவதானிப்புகளை பச்சலெட் அம்மையார் தமது உரையில் இன்று பிரதிபலிப்பார். இலங்கை பற்றிய அவரது உரை சுமார் ஐந்து நிமிட நேரம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இலங்கை தொடர்பான அவரது உரை காட்டமாக இருக்கும் என்றே ஆரம்பத்தில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இலங்கை விவகாரத்தை சர்வதேச களநிலைவரங்களுக்கு ஏற்ப அவசரப்படாமல் இராஜதந்திரத்துடன் கையாளும் விதத்தில் ஆணையாளரின் உரை அமையும் என்று ஜெனிவா வட்டாரங்கள் இப்போது தெரிவிக்கின்றன.**

**அவர் பந்தை இலங்கையின் களத்துக்குள் மீண்டும் அடித்து விடுவார் என்றே தெரிகின்றது. எதிர்காலத்தில் இலங்கையை மடக்குவதற்கான தந்திரோபாயமாக இது பார்க்கப்படுகின்றது.**

**பதவியேற்ற புதிய கோட்டாபய அரசு, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்பாக விட்டேத்தியாக நடந்தது. அந்த மன்றில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இருந்து விலகுவதாக அறிவித்த அது, அதன் காரணமாக அத்தீர்மானங்கள் தன்னைக் கட்டுப்படுத்தா என்றும் பிரகடனப்படுத்தியது.**

**கடந்த மார்ச்சில் நடைபெற்ற 46ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் எதிர்த்த கொழும்பு, தமது இணக்கமின்றி நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் தம்மைக் கட்டுப்படுத்தா என்றும் பிரகடனப்படுத்தி முரண்டு பிடித்தது.**

**இப்போது கொழும்பு அரசின் போக்கில் ஒரு மாற்றம். தாம் ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவித்த அந்தத் தீர்மானத்தில் – கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மான வாசகத்தில் – எதை, எதை அல்லது எவை, எவற்றைத் தான் இதுவரை நிறைவேற்றியிருப்பதாகப்பட்டியலிட்டு ஓர் அறிவிப்பை கொழும்பு விடுத்திருக்கின்றது. அதாவது அந்தத் தீர்மானத்துக்கு இணங்கி இயங்குவது போல அது காட்டமுற்படுகின்றது.**

**கொழும்பின் இந்தப் போக்கு மாற்றத்தையே நேற்றுமாலை இப்பத்தியில் 'இலக்கணம் மாறுதோ...?' என்று குறிப்பிட்டு விளக்கியிருந்தோம்.**

**அந்த மாற்றத்தையே இன்று தமது உரையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பற்றிப் பிடித்துக் கொள்வார் என்று தெரிகின்றது.**

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மான வாசகங்களை ஏற்றுக் கொள்ளும் கொழும்பின் போக்கை வரவேற்கும் அவர், அதைச் செயலில் காட்டும்படி இன்றைய உரையில் கோருவார் என அறியவருகின்றது.**

**நல்ல முடிவுதான். ஜெனிவாத் தீர்மான வாசகங்களை இலங்கை ஏற்றுக் கொள்கின்றது என்று ஆணையாளர் கூறும்போது இன்றைய நிலையில் கொழும்பு அதை மறுக்க முடியாது என்பதே நிலைவரம். அப்படி ஏற்றுக் கொள்வதை – அதற்கு இணங்குவதை – வைத்துத்தான் அடுத்த மார்ச்சில் தாம் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கும் எழுத்து மூல அறிவிப்பில் எதை, எதை இலங்கை நிறைவேற்றியுள்ளது, எவை, எவற்றை நிறைவேற்றவில்லை என்பதை ஆணையாளர் அறிவிக்க முடியும்.**

**ஆணையாளரின் இன்றைய அறிவிப்பு வெளிப் பார்வைக்கு அப்பட்டமாகப் பதுங்கலாகத்தான் தோன்றும். ஆனால், கொழும்பைச் சிக்க வைக்கும் விதத்தில் அடுத்தடுத்த அமர்வுகளில் இலங்கை மீது பாய்வதற்கான முன்னாயத்தம் இது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

# பாடசாலைகளைத் திறந்தால் மாணவர்கள் கொத்தணி வரும்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

பாடசாலைகளை மீள ஆரம்பிக்க முன்னர் 12 வயதுக்கு மேற்பட்ட சகல மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்ய வேண்டும். அவ்வாறில்லை எனில் மாணவர்கள் மத்தியில் கொத்தணிகள் உருவாக வாய்ப்புள்ளது.

தேவையான தடுப்பூசிகளை பகிர்ந்தளித்தால் மாணவர்களுக்கு பாதுகாப்பான முறையில் அவற்றை வழங்க தயார் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் தற்போது சமூகத்திலுள்ள தொற்றாளர்கள் பாடசாலைகளுக்குள் வந்து மாணவர்கள் மத்தியில் கொத்தணிகள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இதன் காரணமாக மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் என சகலரும் மன உளைச்சலுக்கு உள்ளாகக் கூடும்.

இதன் காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் வீதம் குறைவடைவதோடு, ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதிலும் சிக்கல் ஏற்படும். - என்றார்.

# முல்லைத்தீவில் புதிய கொவிட் கொத்தணி உருவாகும் அபாயம் என மக்கள் விசனம்

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் இடம்பெற்று வருகின்ற பொதுமக்களுக்கான இரண்டாவது தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டால் புதிய கொவிட் கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களுக்கான இரண்டாவது தடுப்பூசி வழங்கும் செயற்பாடு கடந்த சில நாள்களாக காலை 9 மணி முதல் இடம்பெறும் எனச் சுகாதாரப் பிரிவினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணி கட்டம் கட்டமாக இடம்பெற்று வருகின்றது.

அதில் ஒரு கட்டமாக முள்ளியவளை மத்தி, முள்ளியவளை தெற்கு பகுதியில் வசிக்கும் மக்களை இரண்டாவது தடுப்பூசி பெற்றுக்கொள்ளத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த பகுதிகளை சேர்ந்தவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளக் கடந்த சில நாள்களாகச் சென்றபோது 110 நபர்களுடைய பெயர் மட்டுமே வந்துள்ளது எனக் கூறி 100 இற்கு மேற்பட்டவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதேவேளை திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சிலர் வேறு தடுப்பூசி வழங்கும் இடங்களுக்குச் சென்று தடுப்பூசி அட்டையை காண்பித்து சிரமமின்றி இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனவே, சுகாதாரத்திணைக்களத்தினர் திட்டமிடாமல் தடுப்பூசிக்காக மக்களை ஒன்று திரட்டி பின்னர் தடுப்பூசியை வழங்காது திருப்பியனுப்பியமை புதிய கொவிட் கொத்தணி உருவாகக் காரணமாக அமைந்திருக்கும் எனவும் மக்களைச் சுகாதாரப் பிரிவினர் ஏமாற்றினர் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# பிறந்த 8 நாள்களேயான குழந்தைக்கும் உறுதியானது கொவிட் வைரஸ் தொற்று

காய்ச்சல் காரணமாகத் திருகோணமலை - மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட எட்டு நாள் குழந்தைக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

மஹதிவுல்வெவ - தெவனிபியவர பகுதியில் வசித்து வரும் 23 வயது தாயின் குழந்தைக்குக் காய்ச்சல் காரணமாக கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு பெறப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மூலம் பிறந்து எட்டு நாள்களான குழந்தைக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் இதனையடுத்து தாய்க்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் விடயத்துக்குப் பொறுப்பான வைத்தியதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த தாயாருடன் வசித்து வந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும், தொடர்ந்தும் அவரது குடும்பத்தினருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதானோரை மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கோரிக்கை

## அவர்களின் உறவுகள் உருக்கம்

திருகோணமலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்து, கைது செய்யப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான ஊடக சந்திப்பு திருகோண மலையில் இடம்பெற்றிருந்தது. இதன் போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

எமது பிள்ளைகளுக்கும் பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் கூறும் தரப்பினருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

அவர்களுடைய வயதுக்கு இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றதே அவர்களுக்குத் தெரியாது. இருப்பினும் சமூக வலைத்தளங்களில் அதன் பின்விளைவுகள் பற்றி அறியாமல் தவறுதலாக சில பதிவுகளைப் பதிவிட்டிருந்தார்கள்.

அது தவறுதான். அந்த தவறை மன்னித்து விடுதலை செய்ய ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை அவர்கள் செய்யமாட்டார்கள் எனவும் மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்கள்.

இவர்கள் தொடர்பாக வழக்குகள் இடம்பெற்று வரும் நிலையில் அதில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. அவர்களுடைய உழைப்பில்தான் எங்களுடைய வாழ்வாதாரம் தங்கியிருந்தது.

இப்போது நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றோம். எனவே எங்களுடைய குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களைப் பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய படங்களையும், செய்திகளையும் பகிர்ந்தார்கள் என்ற குற்றச் சாட்டில் திருகோணமலையில் சில இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த வருடமும் இந்த வருட ஆரம்பத்திலும் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இவர்களுடைய வழக்குகள் மூதூர் மற்றும் திருகோணமலை நீதிமன்றங்களிலும் இடம்பெற்றுவருகின்றன. அத்துடன் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது மகாநாடு இன்று இடம்பெறவுள்ளதுடன், இதில் முதல் விடயமாக இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயம் பேசப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 74

ந.வித்தியாதரன்

ஊடக ஜாம்பவான் எஸ்.டி.எஸ். ஐயா குறித்து அவரோடு மிக நெருக்கமாக பழகிய மற்றொரு ஊடக பெருமகனார் அமரர் இரா.பத்மநாதன் குறிப்பிட்ட விவரங்களின் ஒரு பகுதியை நேற்று பார்த்தோம்.



தமிழரசு வெளியிட்ட முத்திரை

இன்றும் அது தொடர்கின்றது:-

**ஊர்காவற்றுறை நவரத்தினம்**

ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த வி.நவரத்தினம் அவர்களும் எஸ்.டி.எஸ்ஸும் சிறந்த நண்பர்கள். தமிழரசுக் கட்சியின் முக்கியமான போராட்டங்களை இருவரும் பின்னணியிலிருந்து வடிவமைத்துக் கொடுத்தனர். அதே காலத்தில் தமிழரசுக் கட்சியின் மூளை என்று இருவரும் கருதப்பட்டார்கள். 1961 ஆம் ஆண்டு இடம்பெற்ற சத்தியாக்கிரக மறியல் போராட்டத்தின் ஓரம்சமாக தபால் முத்திரை வெளியிடப்பட்டமைக்கும் இவ்விருவருமே காரணகர்த்தாக்களாக இருந்தனர்.

திரு.சிவநாயகம் சுதந்திரனை விட்டு வெளியேறியமைத் தொடர்ந்து திரு.நவரத்தினமும் கட்சியிலிருந்து வெளியேறினார்.

சுதந்திரனை விட்டு விலகிய பின்னர் 'வீரகேசரி' தினசரியில் சில காலம் பணிபுரிந்தார். அதன் பின்னர் மெய்கண்டான் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட 'தமிழின்பம்' மாத இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராகச் செயலாற்றினார்.

இந்த வேளையில்தான் எம்.டி.குணசேன நிறுவனத்தினர் ஒரு பத்திரிகை நிறுவனத்தினைத் தோற்றுவித்தனர். 'தவச' (சிங்களம்), 'சண்' (ஆங்கிலம்) ஆகிய ஏடுகளுடன் 'ராதா' என்ற தமிழ் வார ஏட்டினையும் தொடங்கினர். 'தினபதி' என்ற தினசரியையும் 'சிந்தாமணி' என்ற வார ஏட்டினையும் வெளியிடும் – பொறுப்பினை திரு.சிவநாயகத்திடம் ஒப்படைத்தனர். அத்துடன் அந்நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவராகவும் சிவநாயகம் அவர்களை பின்னர் இணைத்துக் கொண்டனர். வார வெளியீடான 'சிந்தாமணி'க்கு திரு.இராஜா அரியரத்தினம் என்ற பழம் பெரும் எழுத்தாளரை எஸ்.டி.எஸ். அவர்கள் ஆசிரியராக்கினார். எழுத்துலகில் தனது இணை பிரியாத் தோழரான கே.கே.இரத்தினசிங்கம் அவர்களையும் எஸ்.டி.எஸ். தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

தினபதியும், சிந்தாமணியும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உன்னதமான வரவேற்பினைப் பெற்றன. சுதந்திரனிலும் வீரகேசரியிலும் புதிய புதிய எழுத்தாளர்களை ஊக்கம் கொடுத்து வளர்த்ததைப் போன்றே இப்பத்திரிகைகளிலும் சிறந்த எழுத்தாளார்கள் வளரக் களம் அமைத்துக் கொடுத்தார்.

இப்பத்திரிகைகளை வெளியிடும் நிறுவன உரிமையாளர்களின் அஜாக்கிரதையால், பத்திரிகைகள் வெளி வருவது நின்றுவிட்டது.

எஸ்.டி.எஸ். அவர்கள் பல புனை பெயர்களைப் பூண்டு எழுத்தோவியங்களைப் படைப்பார், மக்களுக்கு உணர்ச்சியூட்டும் ஆக்கங்களை 'தியாகி' என்ற பெயர் தாங்கிப் படைப்பார். அரசியல் தகவல்களை கிண்டலாக விமர்சிக்கும் போது 'கியாதி' என்ற பெயரைத் தாங்குவார். 'அபேதன்' என்ற பெயரிலும் எழுதுவார்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அப்போது மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபு மட்டக்களப்பு வந்திருந்தார். அவரின் வருகையை விமர்சித்து 'பாடும் மீன்' என்ற பெயரில் எழுதினார். சோல்பரி பிரபு மட்டக்களப்பு வாவியில் மீன்பாடுவதைக்கேட்க ஆசைப்பட்டார். மீன்கள் பாடவில்லை, ஆனால் அவர் 'ஒற்றையாட்சியே இந்நாட்டுக்கு ஏற்றது என்ற முடிவினை எடுத்தமையினால், தமிழ் பிரதேசத்திலுள்ள பாடும் மீன்களும் அவருக்காகப் பாட மறுத்து விட்டன' என்று நகைச்சுவை ததும்ப எழுதினார்.

**'கிட்டியும் கிறிக்கெட்டும்'**


எழுத்துத் துறையில் மட்டுமல்ல. பேச்சாற்றலிலும் எஸ்.டி. எஸ். தனியானதோர் இடத்தைப் பிடித்திருந்தார்.

இலங்கை வானொலியிலும் அவருடைய உரைகள் அறுபதுகளில் அருமையாக அமைந்திருந்தன. தமிழர்களின், பண்டைய விளையாட்டுக்களில் ஒன்றான 'கிறிக்கிக் கிட்டி'யே பின்னாளில் 'கிறிக்கெட்' ஆட்டமாகப் பரிணமித்தது என்று பல ஆதாரங்களுடன் வானொலி உரையில் நிறுவினார்.

**'எரிமலையுள் மலரிதயம்'**

மேடைப் பேச்சுகளுக்கு எஸ்.டி.எஸ். அவர்கள் தரும் தலைப்புகள் புதுமையானவையாக இருக்கும். தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரான கல்கி அவர்கள் இங்கு நடைபெற்ற பாரதியார் விழா ஒன்றுக்கு வந்திருந்தார். இதே மேடையில் உரையாற்றிய திரு சிவநாயகத்தின் உரைக்கான தலைப்பு 'எரிமலையுள் மலரிதயம்' என்பதாகும். கல்கி அவர்கள் தமது இலங்கைய பயணக் கட்டுரையில் திரு.சிவநாயகத்தைப் பற்றிச் சிறப்பாக எழுதியதுடன் பாரதியார் பற்றிய உரைக்கு அவர் கொடுத்திருந்த தலைப்பையும் வெகுவாகப் பாராட்டினார்.

பண்டாரவளையில் வள்ளுவரைப் பற்றிப் பேசுவதற்காக அவர் கொடுத்திருந்த தலைப்பு 'உலகளந்த ஈரடிகள்' என்பதாகும். மட்டக்களப்பு நாட்டார் பாடல்களைப் பற்றியும் அப்பாடல்களைப் பாடுவோரைப்


சிந்தாமணி ஆசிரியராக இருந்த இராஜ அரியரத்தினம்

பற்றியும் அவர் பேசுவதற்குக் கொடுத்த தலைப்பு 'எழுத்தறியாக் கவிஞர்கள்' என்பதாகும்

மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில் சிறந்த சமூக சேவைப் பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளார். 'சுத்தானந்த கழகம்' என்ற அமைப்பினை நிறுவி அதன் மூலம் பல அரிய பணிகளைப் புரிந்துள்ளார்.

**மகன் நாஸ்திகன்**

திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு கொள்கைகளில் நாட்டம் கொண்டு நாஸ்திகராக வாழ்ந்த போது தான் வந்தாறுமுலையைச் சேர்ந்த அவரது முறைப் பெண்ணான மங்களவதி அவர்களை வாழ்க்கைத்துணையாக ஏற்றார். இவர் கொழும்பு விவேகானந்தாக்கல்லூரியில் ஆசிரியையாக இருந்து இளைப்பாறியவர். மூத்த மகன்உதய நாயகம் பிறந்திருந்த போது நாட்டில் குடிசன மதிப்பு இடம்பெற்றது. குடிசன மதிப்புக்கான




விசாரணைகளை மேற்கொண்டு பதிவதற்காக அலுவலர்கள் சுதந்திரன் பத்திரிகாலயத்துடன் இணைந்திருந்த சிவநாயகம் அவர்களின் இல்லத்துக்கு வந்திருந்தனர். பெயர் விவரங்கள், வயது ஆகியவற்றைக் கேட்டுப் படிவத்தை நிரப்பிய அலுவலர், பிறந்துள்ள குழந்தையின் மதம் என்னவென்று கேட்டார். அதற்கு எஸ்.டி.எஸ். அவர்கள் அளித்த விடையைக் கேட்டு அந்த அலுவலர் திகைப்படைந்தார்.

தனது மகன் ஒரு நாஸ்திகன் என்று திட்டவட்டமாக அவர் கூறினார்.

குழந்தையாக இருக்கும்போது எவருக்கும் மதங்களைப் பற்றி எதுவும் தெரிய வாய்ப்பில்லை. அவர்கள் வளர்ந்து வரும் போது, தமது பெற்றாரைப் பின்பற்றி அவர்கள் தழுவியிருக்கும் மதத்தைச் சார்ந்து விடுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் தனது பெற்றார் ஏற்றுக் கொண்ட மார்க்கம் தனக்குப் பிடிக்கவில்லையானால், வேறு மதத்தை அவர் தழுவிவிடக்கூடும். ஆகவே எனது மகன் இப்பொழுதுதான் தவழ ஆரம்பித்திருக்கிறான். ஆகவே அவனுக்குக் கடவுளைப் பற்றியோ மதங்களைப் பற்றியோ எதுவும் தெரியாது. ஆகவே அவன் ஒரு நாஸ்திகன் என்று எஸ்.டி.எஸ். அந்த அலுவலருக்கு விளக்கம் அளித்தார். அவரால் இந்த விளக்கத்துக்கு மாற்றாக எதுவும் கூற இயலாமற் போய்விட்டது.

(வளரும்.....)


தமிழர் சுயாட்சிக் கழக ஸ்தாபகர் ஊர்காவற்றுறை வி.நவரத்தினம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


**அங்கம் - 129**



கோட்டாபய

**353. விடுதலைப் புலிகளிடையே பேதங்களும், குழுக்களும் தோன்றின என குறிப்பிட்டீர்களே, அவற்றின் விவரங்கள் என்ன?**

அவற்றின் விவரங்கள் எல்லாவற்றையும் எழுதப் போனால் அது நீண்டதாகிவிடும். அவை ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, அவற்றின் மூலங்களையும், அச்சாணிகளையும் தேடிப் போய் அவர்கள் எல்லோரிடமும் பரிச்சயங்களும் கிடையாது. பொது வெளியில், பல ஊடகங்களில், முகநூல்களில் வந்தவற்றில் கிரகித்தவை, சிலர் நேராகவே தந்த தகவல்களை வைத்துக் கூறினேன்.



கே.பி.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், மூத்த தளபதிகளும் கொல்லப்பட்டு, பல போராளிகள் பிடிக்கப்பட்டு, முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின், நாட்டிற்குள் அவர்கள் முற்றாக முடக்கப்பட்டார்கள். அவர்களால் உருவாகியிருந்த கூட்டமைப்பினர் கூட, அவர்களுக்காகப் பேச வரவில்லை, அவர்களைத் தூரத்தில் வைத்தே பழகினார்கள். அவர்களது கட்டுக் கோப்புகள் குலையாது எஞ்சியிருந்தது புலம்பெயர் அமைப்புகளில் தான். ஆயினும் 2008 பகுதியில் கே.பியின் சர்வதேச நியமனத்திலிருந்து அவர்களை சஞ்சலத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்த காஸ்ட்ரோ – நெடியவன் பிரச்சினை போருக்குப் பின் மேலும் முனைப்பெடுத்தது. விடுதலைப் புலிகளின் தலைமைப் பதவியை யார் முன்னெடுப்பது, நிர்வகிப்பது, பிரபாகரன் இறந்துவிட்டார் என ஏற்றுக்கொள்ளப்பட்டால் மக்களிடமிருந்து தொடர்ந்தும் முன்னையப் போல் ஆதரவு வருமா, அவரது மரணத்தை ஏன் விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும், அதை அவசரப்பட்டு செய்தது யார் என்ற கேள்விகள் விவாதங்கள் வந்தன. வெளிப்படையாகவே கே.பிக்கு ஆதரவாளர்கள் – எதிரானவர்கள் எனப் புலம்பெயர் அமைப்புகள் பிரிந்து நின்றன. யார், யார் எந்தப் பக்கம் நின்றார்களென்ற விவரங்களுக்குச் செல்லவில்லை. ஆனால் அவர்களது எல்லா அமைப்புகளும் அவர்களதும், அவர்களுக்கு ஆதரவாக இயங்கிய ஊடகங்களும், முகநூல் கணக்குகளும் கூட இதில் பங்கெடுத்தன.

கே.பி., புதிய வழிகளில் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனத் தன்னைப் பிரபாகரன் பணித்தார் எனவும், அதற்குச் சிறந்த வழி வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயக வழிக்கு வந்து, பயங்கரவாதிகள் என்ற போர்வையைக் கழற்றி, சர்வதேச ஆதரவுடன் முன்னேறிச் செல்வது தான் நல்லது எனத்தெரிவித்து பலரோடும் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இந்த மாற்றங்களுக்கு எதிர்ப்புகள் வந்தன. கே.பி., தன் காலத்திருந்தே தனக்கு ஆதரவாயிருந்த பலருடன் தனக்கும், பிரபாகரன் மற்றும் மூத்த தளபதிகளுக்கிடையே இருந்த பேச்சின் ஒலிப்பதிவுகளைக் காட்டி அதுதான் எல்லோரும் விரும்பியது, தாங்கள் எடுக்க வேண்டிய பாதை என்பதை வெளிக்கொணர்ந்தார். இவற்றால் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளில், புலம்பெயர் அமைப்புக்களை மறுசீரமைப்பதெனவும், அதில் கே.பி. தலைமைச் செயலாளராகவும், நெடியவன் சர்வதேசச் செயலகத்தின் பொறுப்பாளராகவும் நியமனங்கள் பெறுவதான ஓர் உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஜுலை 2009 அது கைச்சாத்திடப்பட்டது.



உருத்திரகுமாரன்



பிரபாகரன்



நெடியவன்

இடையில் கே.பி. அமெரிக்காவில் உருத்திரகுமாரனுடன், விடுதலையை முன்னெடுத்துச் செல்லதான் முன்வைத்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை நிறுவ தன் ஆக்கபூர்வ வேலைகளைச் செய்யத்தொடங்கினார். ஓர் உடன்படிக்கை ஏற்பாடு நடந்திருந்தாலும் கே.பி. புறப்பட்ட பாதைமேலும்கேள்விக்குள்ளானதாகவே இருந்தது. அதன் தொடர்ச்சிகளால் கே.பி. ஓகஸ்ட் 5ஆம் திகதி மலேசியாவில் கைதாகிறார். இதுவும் அவருக்கு எதிரானவர்கள் அவரை அப்புறப்படுத்துவதற்கான குழிபறிப்பு எனவும் கருதப்படுகிறது.

அன்றிரவு கோட்டாவின் வீட்டுக்கு கைதிபோல் அழைத்துச் செல்லப்பட்டு, அவர் வீட்டில் ஒளிர்ந்து கொண்டிருந்த புத்தரின் சிலை முன்னிருந்து பேசியதில், ஞானம் பெற்று நாடு கடந்த தமிழீழ அரசை எல்லாம் மறந்து, அவை வெற்று வேட்டுக்கள் என்று மனம் திறந்து, ராஜபக்ஷவின் ஆட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார். புலம் பெயர்களில் அவரது ஆதரவாளர்கள் எந்த திசையில் பயணிக்கிறார்கள் என்பவை கேள்விக்குறியாக, லண்டன் போன்ற பெருநகரங்களிலேயே விடுதலைப் புலிகளின் "லண்டன் குருப்", "கேம்பிரிட்ஜ் குருப்" என்று வெவ்வேறாகவே மாவீரர் தினங்கள் எனவும் கண்காட்சிகள் என்றும் நடத்துகிறார்கள்.

**354. அப்படியானால் புலம்பெயர் அமைப்புக்கள் விடுதலை நோக்குக்கான கட்டுக் கோப்புக்களை இழந்து விட்டார்களா?**

(பதில் நாளை தொடரும்.....)

# அபாயகர மாறுபாடுகளுடன் நிலைமை மிகமோசமடையும்

## தற்போதைய முடக்கல் பயனளிக்காது என எச்சரிக்கை

பொது மக்களின் இயக்கம் சரியாகக் கட்டுப்படுத்தப்படாவிட்டால் தற்போதைய முடக்கல் பயனளிக்காது என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கூறியுள்ளது.

தற்போது நாட்டில் முடக்கல் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு இல்லாதது போல் மக்கள் நடந்து கொள்கின்றனர் என சங்கத்தின் தலைவர் உபுல்றோஹண தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவை நீடிப்பது உண்மையில் பயனற்றது. ஏனென்றால் நாட்டின் தற்போதைய முடக்கலால் எதிர்பார்க்கப்படும் சிறந்த முடிவுகளை அடைய முடியாது என்பது வெளிப்படையானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் -

பொருளாதார நடவடிக்கைகள் பராமரிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், பொருளாதாரத்தை பராமரிப்பதுஎன்றபோர்வையில் மற்ற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்பது மிகவும் தந்திரமானதாகவே அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தவில்லையெனில் எதிர்காலத்தில் மேலும் தொற்று மற்றும் அபாயகரமான கொவிட் வைரஸ்மாறுபாடுகளுடன் நிலைமை மிகவும் மோசமாக இருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

# அரசு எடுத்த தவறான முடிவுகளால் நாடு வருமானத்தை இழந்துள்ளது

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. காட்டம்

அரசு எடுத்த தவறான முடிவுகளால் நாடு இன்று பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த 2019 ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து பெரும் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதியின் வெற்றிக்குப் பின்னர் அரசு எடுத்த தவறான வரிக்குறைப்பின் முடிவின் விளைவாக நாடு வருவாயை இழந்துள்ளது.

12 சதவீத வரியை 8 சதவீதமாகக் குறைத்ததால் அரசு கிட்டத்தட்ட 6 லட்சத்து 700 பில்லியன் ரூபாவை இழந்தது. இதன் விளைவாக, அரசுக்கு வருவாய் குறைந்துள்ளதால் ஈடுசெய்யும் முகமாக, அரசு 1 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாவைத் தற்போது அச்சிட்டுள்ளது.

இதன் விளைவாக, பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளதோடு பணவீக்கமும் அதிகரித்துள்ளது. இன்று அந்நியச் செலாவணிக்கையிருப்பு கிட்டத்தட்ட 290 கோடி ரூபாவாகக் குறைந்துள்ளது. இன்று எந்த உலக நாடுகளும் அரசுக்கு நிதி உதவியை அல்லது கடன் தொகையை வழங்க ஒப்புக்கொள்வதாக இல்லை.

நமது பொருளாதாரப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனவே தவிர, அவற்றில் எதுவுமே குறைவதாக இல்லை. அதனைத் தீர்ப்பதற்கான முயற்சிகளையும் காணமுடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

கொரோனா ஆரம்பம் முதலே இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டன. அடுத்து, சில அரச சார்பு நண்பர்களுக்கு பொருள்களை இறக்குமதி செய்வதற்காகவும், அவர்களுக்கு அனுமதிப்பத்திர முறைமையுடன் சலுகைகளும் வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

அரசுடன் இருந்தவர்களுக்கு இந்த வழியில் இறக்குமதி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. இதனால் எதிர்பார்த்த டொலர் கையிருப்பு அதிகரிக்காமல் குறைவடைந்ததால், பல்வேறு விடயங்களைக் காலத்துக்குக் காலம் கொண்டு வந்தனர். உரங்களுக்கான இறக்குமதிக்குத் தடைவிதித்தனர்.

எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பெற்றோலியத்துறை அமைச்சர் கேட்டார் என அரசு கடந்த காலங்களில் பலமுறை கூறியுள்ளது. அது குறித்த மாறுபட்ட அனைத்துவிதமான கதைகளையும் அரசு உருவாக்கியது. எண்ணெய் விலையை அதிகரித்தது ஜனாதிபதி தான்.

பெற்றோலியத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் என்று அவர் ஓர் அறிக்கையையும் வெளியிட்டார். டொலர்கள் பற்றாக்குறை பற்றி அவர் கூறவில்லை. டொலர்கள் பற்றாக்குறையின் கதையைப் பெற்றோலியத்துறை அமைச்சர் கூறினார். அரசால் இவற்றை ஈடுசெய்ய முடியாதபோது, ஜனாதிபதி பல்வேறு மாற்று விடயங்களைக் கூறினார். மஞ்சள் இறக்குமதி செய்வதை நிறுத்தியபோது, நம் நாட்டில் மஞ்சள் பயிரிடப்போவதாக கூறப்பட்டது. டொலர் பற்றாக்குறையுள்ளதாகச் சொல்லவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# புதிய நிதிச்சட்டம் தொடர்பில் ட்ரான்ஸ்பேரன்சி எச்சரிக்கை

2021 செப்டெம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட புதிய நிதிச் சட்டம் குறித்து ட்ரான்ஸ்பேஷரன்சி இன்டர்நேனல், தமது ஆழ்ந்த அக்கறையைவெளிப்படுத்தியுள்ளது.

இத்தகைய முயற்சிகளை எதிர்கொள்ள அதிகாரிகள் கூடுதல் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், இந்த பொது மன்னிப்பு திட்டம் பணமோசடி நோக்கத்திற்காக தவறாக பயன்படுத்தப்படலாம் என்று ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புதிய சட்டம் குறித்து கருத்துரைத்துள்ள ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் அமைப்பின் நிர்வாக இயக்குனர் நடிசானி பெரேரா, நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை புரிந்து கொள்கின்றபோதும், அந்நிய செலாவணி தேவை என்பதற்காக இத்தகைய பரந்த அளவிலான பொது மன்னிப்பை நாடுவது கறுப்புப் பணத்தை நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக இலங்கை, இறுதியில் தவறான வருமானங்களுக்கான ஒரு புகலிடமாக மாறும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். எனவே சட்ட அமுலாக்கமற்றும்ஒழுங்குமுறை அதிகாரிகள் இந்த வரி பொது மன்னிப்பு, நாட்டுக்கு தீங்கு விளைவிக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# காதி நீதிமன்றங்களை ஒழிக்க முயல்வது அரசு செய்கின்ற வரலாற்றுத் தவறாகும்!

## இம்ரான் எம்.பி. காட்டம்



தற்போது நடைமுறையிலுள்ள காதி நீதிமன்றங்களை ஒழிக்க முனைவது இந்த அரசு செய்யும் வரலாற்றுத் தவறாகும். இந்த தவற்றைச் செய்ய வேண்டாம் என்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றேன் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

முஸ்லிம் விவாக, விவகாரத்துச் சட்டம் சுதந்திரத்துக்கு முன்பிருந்தே இந்த நாட்டில் அமுலில் உள்ளது. இதனை அடிப்படையாக வைத்தே காதி நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த ஒல்லாந்தரோ, ஆங்கிலேயரோ கூட இந்த விடயத்தில் கை வைக்கவில்லை.

எனினும், இந்த அரசு காதி நீதிமன்றங்களை ஒழிக்கும் பாரிய வரலாற்றுத் தவறைச் செய்ய முனைகின்றது. இது தொடர்பாக நான் மிகவும் கவலையடைகிறேன். காதி நீதிமன்ற அமைப்புகளில் குறைபாடுகள் இருப்பின் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர முற்றாக ஒழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது. இது காலுக்கு அணிய வாங்கிய செருப்பு சிறியது என்பதற்காகச் செருப்பை மாற்றாமல் செருப்புக் கேற்ப காலை வெட்டுவது போன்ற செயலாகும். இது ஆரோக்கியமானதல்ல. ஆண்டாண்டு காலமாக அமுலிலிருந்து வரும் இந்த காதி நீதிமன்ற முறையை ஒழிக்கப் போவதாக அரசு பகிரங்கமாக அறிவித்திருந்தும் முஸ்லிம் கட்சிகள் எவையும் இது தொடர்பில் இதுவரை வாய் திறக்கவில்லை.

முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தான் முஸ்லிம் கட்சிகளை உருவாக்கியதாகக் கூறுகின்றார்கள். முஸ்லிம்களின் வாக்குகளினாலேயே நாடாளுமன்றத்துக்கும் வந்தார்கள். தேர்தல் காலங்களில் இந்த அரசுக்கு எதிராக மோசமான பிரசாரங்களை முன்வைத்த இவர்கள் இப்போது இந்த அரசாங்கத்தோடு ஒட்டியிருக்கின்றார்கள்.

காதி நீதிமன்றத்தை ஒழிக்கப் போவதாக அரசு தற்போது பகிரங்கமாக அறிவித்துள்ளது. இது முஸ்லிம்களது உரிமை இல்லையா? ஏன் இன்னும் மௌனமாக இருக்கின்றீர்கள் என்று நான் முஸ்லிம் கட்சிக்காரர்களைக் கேட்க விரும்புகின்றேன். இது விடயத்தில் முஸ்லிம் கட்சிகளின் நீண்ட மௌனம் முஸ்லிம் கட்சிகளின் சம்மதத்தோடு தான் இந்த விடயம் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே அரசின் இந்த வரலாற்றுத் தவறுக்கு துணை போகும் செயற்பாட்டிலிருந்து முஸ்லிம் கட்சிகள் விடுபட வேண்டும் அதனைப் பகிரங்கமாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். - என்று அவர் தெரிவித்துள்ளார்.



# மஞ்சள், மின்சாதன பொருள்களை கடத்த முயன்ற ஐந்து பேர் கைது

மன்னார், கற்பிட்டி - துடாவ மற்றும் அரிப்பு கடலோரப் பகுதிகளில் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, 1,628 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மற்றும் ஒரு தொகை மின்சாதனப் பொருள்களை கடத்த முயற்சி செய்த ஐந்து சந்தேக நபர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். வெள்ளி நள்ளிரவு மற்றும் சனி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட குறித்த நடவடிக்கையில், 2 டிங்கி படகுகளைக் கைப்பற்றியுள்ளதாக, கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வெள்ளி இரவு கற்பிட்டி துடாவ கடற்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, துடாவ கரையை நோக்கி வந்த சந்தேகத்திற்கிடமான படகைச் சோதனையிட்டபோது, 31 உரப்பைகளில் அடைக்கப்பட்ட 1,134 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளுடன் மேலும் 2 பொதிகளில் காணப்பட்ட வீட்டு மின்சாதனப் பொருள்களுக்குப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் பொருள்களும் காணப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து குறித்த பொருள்கள் மற்றும் 3 சந்தேக நபர்களுடன் டிங்கி படகைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, சனி காலை அரிப்பு முகத்துவாரம் பிரதேச கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, அரிப்பு பிரதேசத்தை நோக்கி வந்த சந்தேகத்திற்கிடமான டிங்கி படகைச் சோதனையிட்டபோது, 17 உரப்பைகளில் அடைக்கப்பட்ட நிலையிலிருந்த 494.1 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளைக் கைப்பற்றியுள்ள கடற்படையினர், சந்தேகத்திற்கிடமான படகிலிருந்த 2 சந்தேக நபர்களுடன் டிங்கிப் படகையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்கள் 26 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், கற்பிட்டி மற்றும் பேசாலை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடற்படையினரால் கற்பிட்டி துடாவ பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், உலர்ந்த மஞ்சள், மின் உபகரணங்கள், டிங்கி படகுகள் ஆகியவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரிப்பு முகத்துவார பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், யாழ் சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட முன்னர், தனிமைப்படுத்தலுக்காக பொதுச்சுகாதாரப் பரிசோதகரிடம் கையளிக்கப்பட்டுள்ளதோடு, உலர் மஞ்சள் மற்றும் டிங்கி படகு ஆகியன மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்.சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கடற்படை தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 37

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சீன அரசாங்கத்தின் வீடியோ கேம் கட்டுப்பாடுகள் மெய்நிகர் தளங்கள் கல்வியில் புரட்சியை மேற் கொண்டுவரும் அதேவேளை சிறுவர்களையும் இளைஞர்களையும் பல்வேறு வகைகளில் பாதிக் கிறது என்பதையும் அறிய முடியும். இந்தச்சூழ்நிலை யில் பல சர்ச்சைக்குரிய இணையவழி விளையாட்டுக் களை உருவாக்கி சிறுவர்களையும் இளைஞர்களை யும் அதற்கு அடிமையாக்கியிருக்கின்ற சீனா இந்த பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு தனது நாட்டின் சிறுவர்கள் இளைஞர்கள் இணையவழி விளையாட்டுக் களை விளையாடுவதற்கு கடுமையான கட்டுப்பாடு களை விதித்துள்ளது. இது சர்வதேச ரீதியில் 'புருவங் களை உயர்த்த' வைத்திருக்கிறது. அமெரிக்காவின் ஊடகங்கள் இந்த கட்டுப்பாடு தொடர்பாக விவாதிக் கின்றன.

இந்த நடவடிக்கை சமூக வழிகாட்டுதல்களை அமுல்படுத்துவதற்கான ஒரு பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக வீடியோ கேம் விளையாடுவதென்பது போதைப்பொருளுக்கு அடிமையாவதற்கு சமமானது என்று சீன ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. கடுமையான விவாதங்க ளுக்கு பின்னர் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட தால், சீனாவின் மிகப்பெரிய வீடியோ கேம் நிறுவனங் கள் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளன. இந்தக் கட்டுப் பாடுகள் சிறுவர்கள் சமூகத்திலிருந்து விடுபட்டு வீடியோ கேமில் செலவழிக்கும் நேரத்தை கடுமை யாக கட்டுப்படுத்துகிறது.

தற்போது சீனா விதித்துள்ள கட்டுப்பாடுகளின்படி நாட்டில் 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளி, சனி,ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 8.00மணி தொடக்கம் 9.00 மணிவரை மட்டுமே வீடியோ கேம் விளையாட அனுமதிக்கப்படுகின்றது. மீறுவோர் மீது 'போதை எதிர்ப்பு' நடவடிக்கைக்கு ஒப் பான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

சீனாவின் புதிய வீடியோ கேம் கட்டுப்பாடுகள் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மீது அக்கறையை வெளிக்காட்டும் செயலாகப் பார்க்கப்படுவதால் உலகில் பாராட்டுக்கள் கிடைக்கப்பெறுவதோடு பல அரசாங்கங் கள் மெய்நிகர் தளங்கள் தொடர்பாக தகுந்த கொள்கை களை உருவாக்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளன. இந்தச் சூழலால் வீடியோ கேம் உருவாக்கும் நிறுவ னங்கள் மீதும் அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சிறுவர்களைப் பாதிக்காத வீடியோ கேம் உருவாக்கம் பற்றி சிந்திக் கின்றன. இதே போன்று வன்முறை விளையாட்டுக் களை ஜேர்மனி தடை செய்ய முயற்சிக்கிறது. சீன வீடியோ கேம் கட்டுப்பாடுகள் மற்ற நாடுகளில் குழப்ப மான எதிர்வினைகளை ஏற்படுத்தியுள்ளதையும் அவ தானிக்கலாம். அதாவது, வீடியோ கேம்களில் ஈடுபடு வது சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மிகவும் மோசமான விளைவுகளை தரக்கூடியது என்பதை முற்றிலும் தெளிவாக குறிப்பிட முடியாமையே இந்தக் குழப்பத்திற்கு காரணமாகிறது. அதாவது சில ஆய்வுகள் வீடியோ கேம்களை விளையாடுவது உண்மையில் குழந்தைகளின் அறிவாற்றல் திறனை மேம்படுத்தும் என்று கூறுகிறது. அதேவேளை வீடியோ கேம் விளையாடுவதற்கு செலவிடப்படும் நேரத்தை கட்டுப் படுத்துவதால் எந்த வகையான தாக்கம் அல்ல நன்மை ஏற்படும் என்பதும் தெளிவில்லாமல் உள்ளது.

இதேவேளை இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீன இளைஞர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய் வின்படி, தினசரி நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட



மணிநேரம் பொழுதுபோக்குக்காக இணையம், சமூக ஊடகங்கள் அல்லது வீடியோ கேம்களைப் பயன் படுத்துபவர்கள் பாடசாலையைத் தவிர்ப்பதற்கு நான்கு மடங்கு அதிக வாய்ப்புள்ளது என்ற தகவலை வெளி யிடுகிறது. அதேவேளை நடத்தை மாற்றம் மற்றும் நிதி முடிவெடுப்பதையும் பாதிக்கிறது என்றும் குறிப்பிடப் படுகின்றது. இவ்வாறான முடிவுகளால் தான் சிறார் களுக்கான வீடியோ கேம் கட்டுப்பாடுகள் சீனாவில் அமுலுக்கு வந்திருக்கின்றன என்று நம்பலாம்.

இந்தக் கட்டுப்பாடுகளின்படி வெள்ளிக்கிழமை, வார இறுதி மற்றும் விடுமுறை நாள்களில் சிறார்கள் ஒரு மணிநேரம் மட்டுமே வீடியோ கேம்களை விளை யாட முடியும் என்றும், பள்ளி வாரத்தில் விளையாட தடை விதிக்கப்படுவதாகவும் சீனா அறிவித்துள்ளது. புதிய விதி சீனாவின் வீடியோ கேம் ரெகுலேட்டர், நேஷனல்பிரஸ்அண்ட்பப்ளிகேன்அட்மினிஸ்ட்ரேனில் இருந்து வந்திருக்கின்றன. இந்தக் கட்டுப்பாடுகள் செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந் திருக்கின்றன.

இந்தக் கொள்கை முடிவுக்கு வருவதற்கு முன்னரே சீனா வீடியோ கேம் விளையாடுவது தொடர்பான பல கட்டுப்பாடுகளை அமுல்படுத்த ஆரம்பித்திருக்கின் றது. குறிப்பாக சீனாவில் 2019 ஆம் ஆண்டில், 18 வயதிற்குட்பட்ட விளையாட்டாளர்கள் 10 மணிக்குள் விளையாடுவதை நிறுத்த வேண்டும் என்று அரசாங் கம் அறிவித்தது. மற்றும் காலை 8 மணி, மற்றும் வார நாள்களில் 90 நிமிடங்கள் மட்டுமே விளையாட முடியும். 2018 ஆம் ஆண்டில், பெய்ஜிங்கில் கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களுக்கு வீடியோ கேம்களை வெளி யிடுவதை நிறுத்தியது.

இதன் தொடர்ச்சியே இந்தக்கட்டுப்பாடு சீன அர சாங்கத்தின் கட்டுப்பாடுகளின்படி இளையோர் தங்கள் உண்மையான பெயர்களுடன் விளையாட்டுகளில் பதிவு செய்ய வேண்டும் மற்றும் கேமிங் நிறுவனங்கள் உண்மையான பெயர்களைக் கேட்க வேண்டும் போன்ற கட்டுப்பாடுகளைக் கொண்டு வருகின்றது. இதற்கேற்ப வீடியோ கேம் நிறுவனங்கள் விளை யாட்டு நேரத்தைக் கட்டுப்படுத்த உண்மையான பெயர் அடிப்படையிலான பதிவு முறையைப் பயன் படுத்தத் தொடங்கியுள்ளன. உதாரணமாக டென்சென்ட் அதன் வெற்றிகரமான மொபைல் வெற்றி, 'ஹானர் ஆஃப் கிங்ஸ்' மூலம் உண்மையான பெயர்களைக் கேட்கிறது.

டென்சென்ட் அதன் அதிகாரப்பூர்வ WeChat கணக் கில் ஒரு அறிக்கையில் புதிய விதியை உறுதியாக ஆதரிக்கிறது என்றும் அதை பின்பற்ற அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்றும் கூறுகிறது. மேலும் இந்த நிறுவனம் 2017 முதல் சிறார்களை விளையாட்டுகளுக்கு அடிமையாகாமல் இருக்க வழிகளை செயல்படுத்தி வருகிறது என்று அது கூறியது.

சீனாவின் இந்தக் கட்டுப்பாடு உலகம் முழுவதும் சிறார்களிடையே கேமிங் அடிமைத்தனம் பற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. தற்போது சமூகத்தில் காணப்படும் வீடியோ கேம்களின் பிரபலத்தின் பின்னால் எதிர்மறையான விளைவுகள் உண்டு என் பது உணரப்படுகின்றது. இந்தக் கட்டுப்பாடுகளை உடைப்பதற்கு பெரியவர்களின் கணக்குகளைப் பயன்படுத்தினால் குழந்தைகள் தடையை மீறுவது சாத்தியம், அந்த தந்திரத்தை தடுக்க குடும்ப ஒத்து ழைப்பை சீன அரசாங்கம் கேட்கிறது. மேலும், சீனாவில் சிறுவர்கள் ஏற்கனவே விளையாட்டுகளுக் காக மாதம் 400 யுவான் (சுமார் 62 டொலர்) க்கு மேல் செலவழிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

மெய்நிகர் தளங்கள் கல்வியிலும் வீடியோ கேமிலும் பாரிய வளர்ச்சியை நோக்கிச் செல்லும் போது சீன அரசாங்கத்தின் கட்டுப்பாடு ஓடுகிற தேருக்கு தடுப்புக் கட்டைப் போடுவது போன்றதாகும். அது நின்று நிதானித்து செயற்பட வேண்டும் என்ற எச்சரிக்கையை உலகிற்கு விடுத்துள்ளது.





# இரத்தம் படிந்த ஊடகத்துறை!

● முன்சி பஸ்றி

> ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதும், தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும், காணாமல்போவதும், கொலை செய்யப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது.

இலங்கையில் தமிழ் ஊடகத்துறையானது நீண்ட வரலாற்றையும் தனித்துவமான பாரம் பரியத்தையும் கொண்டது. ஊடகப் பரப்பில் கதாநாயகர்களாக இயங்கிய, தொடர்ந்து இயங்கி வருகின்ற அனைவரும் சாதனைகளுக்கும், புதுமை களுக்கும் சொந்தக்காரர்களாக உள்ளனர்.

தமிழ் ஊடகத்துறை வளர்ச்சியிலும் வரலாற்றி லும் புதிய வரவுகளை தந்த ஊடகவியல் குருக்கள் பலர் உள்ளனர். இதில் சிலர் முதன்மையானவர்க ளும் கூட. இதழியல் பரப்புடன் தம்மை இரண்டறக் கலந்து இன்புற்ற இவர்களின் பணிகள் காலத்தால் அழியாதவை.

பல சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஊடகவிய லாளர்கள் தங்களது பணியிலும் துறையிலும் கொள் கையிலும் நிதானமாக வழிநடந்ததன் விளைவாகவே இன்று அவர்களது வீரத் தடங்கலைத் தேடுகின்றோம். மேலும், ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதும், தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும், காணாமல்போவ தும், கொலை செய்யப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக தமது சகாக்கள் இழந்த துயருடனே ஊடகப் பணியாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இலங்கை ஊடகவியலா ளர்கள் பயணிக்கின்றனர்.

இதைப்போல் பத்திரிகை நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், நிறுவனம்சார் தொழிலாளர்கள் தாக்கப் படுவதும், கொலை செய்யப்படுவதும், ஊடக நிறுவ னங்கள் சீல் வைத்து மூடப்படுவதும், பத்திரிகைகளை நடு வீதியில் வைத்து எரிப்பதும், பத்திரிகை அலுவல கங்கள் எரியூட்டப்படலும் இலங்கை தமிழ்த் ஊடகப் பரப்பில் அதிகமாகவே நடந்துள்ளன. இவை தொடர் பில் யாரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டதாகவோ அல் லது தண்டிக்கப்பட்டதாகவோ தரவுகள் எதுவும் கிடைக்க வில்லை. துறைசார் ரீதியில் பொதுவான கண்டனங் களும், ஆர்ப்பாட்டங்களுமே எஞ்சியுள்ளன.

இலங்கை ஊடகப் பரப்பில் பணியாற்றியபோது கடந்த தசாப்த காலத்தில் பல ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் சங்கம் 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளியிட்ட அறிக் கையின்படி 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் இலங்கையில் 50 இற்கும் அதிகமான ஊட கவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், இவர்களில் 39 பேரின் விவரங்கள் மாத்திரமே திரட்டப் பட்டு உள்ளன. பத்திரிகை ஆசிரியர் இருவர், பத்தி ரிகையாளர்கள் 14 பேர், பத்திரிகை முகாமையாளர் கள் இருவர், புகைப்பட பத்திரிகையாளர்கள் ஒருவர், ஊடக ஊழியர்கள் 14 பேர், எழுத்தாளர் இருவர், பாடகர் ஒருவர் என இவர்கள் ஊடகத்துக்காக உயிரிழந் தவர்கள்.

எந்தவொரு வெற்றிக்குப் பின்னாலும் பல இன்னல் கள், பல போராட்டங்கள், பல முரண்பாடுகள், பல முயற்சிகள், பல போராளிகளின் தியாகங்கள் எனப் பல படிகற்கள் காணப்படும். ஆனால், நாம் வெற்றி யின் உச்சியில் இருந்து மிதித்து வந்த படிக்கற்களைப் பார்ப்பதில்லை. அத்தகைய படிக்கற்கள்தான் இவர் கள்.

நாம் இன்று ஊடகத்துறையில் உயர்ந்த நிலையில் இருக்கின்றோம் என்றால் - இலங்கை முழுவதும் ஊடகப் பயன்பாடு காணப்படுகின்றது என்றால் அதற் கெல்லாம் காரணம் ஊடகம் என்னும் விதையை விதைத்து அதற்கு அவர்கள் இரத்தத்தை ஊற்றி தங் கள் வாழ்வையே உரமாக ஊட்டினர். ஊடகம் எனும் ஆழ்கடலுக்குப் பாலம் அமைத்துத் தந்த இத்தகைய பறவைகளை நாம் மறக்க முடியாது.

## நீரின்றி அங்கலாய்க்கும் கொழும்பு வாழ் மக்கள்

கொழும்பு மாவட்டத்தில் மட்டக்குளி, மோதரை, கிராண்ட்பாஸ் ஆகிய பகுதி களில் மக்கள் நீரின்றி பெரும் அசௌகரி யத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தி யிலும் கைகளை கழுவி சுத்தம் செய்ய முடியாது சுகாதார அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்

வெள்ளிக்கிழமை பகல் வேளையிலி ருந்து குடிதண்ணீர் இல்லாது பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளோம். எவ்வித முன்னறிவித்தலுமின்றி குடிதண்ணீர் விநியோகம் துண்டிக் கப்பட்டுள்ளது என்கிறார் தண்ணீக்கா காத்து நின்ற நபரொருவர்.

இதேவேளை, அளுத்மாவத்தை பகுதியில் அமைந்துள்ள குடிதண் ணீர் விநியோக குழாய் உடைந் துள்ளதால் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தி னால் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் தவித்து வரும் நாங்கள் தற்போது குடிதண்ணீர் இல்லாமலும் தவித்து வருகின்றோம் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

குடிதண்ணீர் விநியோக தண்ணீர் பவுஸர்கள் வரும் வரையில் 3 மணித் தியாலமாக காத்திருக்கிறோம் என மூதாட்டியொருவர் தெரிவித்தார்.

## மன்னார் மாவட்ட பெரியமடு குளத்தில் 4 லட்சம் இறால் குஞ்சுகள் விடுவிப்பு

மன்னார், செப். 13

மன்னார் சமூக பொருளாதார மேம் பாட்டுக்கான நிறுவனமும் வடக்கு மாகாண சபையும் இணைந்து மன்னார் பெரியமடு குளத்தில் 4 லட்சம் இறால் குஞ்சுகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை விடப்பட் டுள்ளன.

கொரோனாத் தொற்று காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம் படுத்தவும் அதேவேளை நன்னீர் மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் இவற் றுக்கான இறால் குஞ்சுகள் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொரு ளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் அனர்த்த முகாமைத் துவ உதவி ஆணையாளர் கனகரத் தினம் திலீபன், வடக்கு மாகாண சபை உத்தியோகத்தர்கள், தேசிய நீர் உயரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தி யோகத்தர்கள், மன்னார் மெசிடோ நிறுவன ஊழியர்கள் மற்றும் பெரியமடு நன்னீர் மீன்பிடி சங்கத்தினர் போன்றவர்களும் கலந்து கொண்டார்கள்.

மேலும் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள குளங்க ளிலும் இறால் குஞ்சுகள் விடுவதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மாவட்ட பணிப்பாளர் யாட் சன் பிகிராடோ தெரிவித்தார்.

# கொலையாளி திருமலையில் சிக்கினார்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை – வல்வெட்டியில் குடும்பத்தகராறு காரணமாக இரு பிள்ளைகளின் தந்தையைக் கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டுத் தப்பித்த உறவினர்களில் ஒருவர் மூன்று வாரங்களின் பின்னர் நேற்று திருகோணமலையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றையவர் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது. சம்பவத்தில் சுப்பிரமணியம் கிருசாந்தன் (வயது – 30) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே கொல்லப்பட்டவராவார்.

கொலையில் ஈடுபட்டவர்களான உறவினர்கள் இருவர் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வந்தனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் திருகோணமலை பொலிஸ் பிரிவில் தலைமறைவாகியுள்ளார் எனக் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான விசேட குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. தற்போதை கொரோனா நிலைமை காரணமாக அங்கு சென்று சந்தேகநபரைக் கைது செய்ய முடியாத நிலையில் திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குத் தகவலளிக்கப்பட்டது.

# மருத்துவபீட மாணவி மர்ம மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி ஒருவர் அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருத்துவபீடத்தைச் சேர்ந்த சாருகா என்ற முதலாம் ஆண்டு மாணவி ஒருவரே சனி மாலை இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

கற்றல் சுமை காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அவருடைய மரணத்துக்கான காரணம் இதுவரை உறுதியாகத் தெரியவரவில்லை.

சுன்னாகத்தைச் சேர்ந்த குறித்த மாணவி உடுவில் மகளிர் கல்லூரியில் முதன்மையான மாணவியாகத் திகழ்ந்துள்ளார்.

இவர் குறித்த கல்லூரியில் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் மருத்துவத்துறைக்குத் தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர் என்றும், அண்மையில் வெளியாகிய பல்கலைக்கழக பரீட்சை முடிவுகளிலும் நிறைவான புள்ளிகளைப் பெற்றிருந்தவர் என்றும் நெருக்கமான மருத்துவபீட மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையின் போக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48ஆவது கூட்டத் தொடர் இன்று காலை ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது.

கடந்த மார்ச்சில் நடைபெற்ற 46ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்ற நிலைமை தொடர்பில் இன்றைய ஆரம்ப உரையில் மனித உரிமைகள் ஆணையாளர் வாய் மூலம் கருத்துரைப்பார்.

அச்சமயம், இத்தீர்மான வாசகங்களை நிறைவேற்றுவதில் இலங்கை மெத்தனமாக இருக்கிறது எனக் குறிப்பிட்டு கொழும்பு அரசை அவர் காட்டமாக விமர்சிப்பார் என முன்னர் கருத்துகள் கூறப்பட்டு வந்தன. ஆனால் இன்றைய பேச்சில் அவர் அந்நிலைப்பாட்டை எடுக்கமாட்டார் என இப்போது தெரியவருகிறது.

கடந்த மார்ச் அமர்வின் போது இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் , அதற்கு முன்னர் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்களையும் ஏற்க மாட்டோம் என முன்னர் ஒரு தலைப்பட்சமாக, அறிவித்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய கொழும்பு அரசு, அத்தீர்மானங்கள் தங்களைக் கட்டுப்படுத்தா என்றும் வெளிப்படையாகக் கூறிவந்தது. இப்போது அந்த நிலைப்பாட்டில் சற்று மாறுபாடான போக்கை அது பிரதிபலிக்கின்றது.

கடந்த மார்ச் மாதத் தீர்மானத்தை ஏற்க மாட்டோம், அது தம்மைக் கட்டுப்படுத்தாது, அந்தத் தீர்மானத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம் எனக் கூறி வந்த கோட்டா அரசு, இப்போது அந்த மார்ச் மாதத் தீர்மானத்தில் கூறப்பட்ட சில, பல விடயங்களைத் தான் நிறைவேற்றியிருப்பதாகவும், அதில் முன்னேற்றத்தைக் காட்டியிருப்பதாகவும், தெரிவித்து அறிக்கை ஒன்றை உத்தியோகபூர்வமாகக் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுரகங்களுக்குக் கையளித்திருப்பது தெரிந்ததே.

இத்தகைய நிலைப்பாட்டை அது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கும் அறிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தைக் கவனத்தில் எடுத்து, அதில் கூறப்பட்டவற்றை நிறைவு செய்யும் எத்தனத்தைக் கொழும்பு அரசு பிரதிபலிப்பது கொழும்பின் மிகப் பெரிய நிலைமாற்றம் என்று கருதும் ஆணையாளர், அதனைத் தமது இன்றைய உரையில் மெச்சுவார் எனத் தெரிகின்றது.

எனினும், இந்த நிலைமாற்றத்துக்கு அமைய விடயங்களைக் காரியத்தில் –செயலில் – காட்டுமாறு அவர் இலங்கையைக் கோருவார் என்றும் தெரிகின்றது.

அப்படி ஒரு கோரிக்கையை வைத்தால்தான், அடுத்த மார்ச் அமர்வில் – இன்னும் ஆறு மாதத்தில் – இலங்கை விவகாரம் தொடர்பில் தாம் சமர்ப்பிக்கப் போகும் எழுத்து மூல அறிக்கையில் இலங்கை தொடர்பாகக் காட்டமான சில நிலைப்பாடுகளை வெளிப்படுத்த முடியும் என ஆணையாளர் கருதுகின்றாராம். அதற்கான முன் ஆயத்தமாகவே இன்றைய தமது உரையை அவர் தயாரித்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டது.

இதே சமயம் –

பயங்கவாதத் தடைச் சட்டத்தை மற்றியமைத்து, ஒழுங்குபடுத்துவது என்ற தனது வாக்குறுதியை கொழும்பு நிறைவேற்றாமை குறித்தும் –

பொலிஸ் காவலில் உள்ள கைதிகள் சுட்டுக் கொல்லப்படுகின்றமை குறித்தும் –

காணாமல்போனோர் விடயத்தில் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதா என்பதைத் தேடமாட்டோம் என்று இலங்கையின் நீதி அமைச்சர் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றமை பற்றியும் –

நாட்டில் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றமை குறித்தும் –

கவலையும் விசனமும் தெரிவிக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இந்த விடயங்கள் கடந்த மார்ச்சில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 46/ 01 இலக்கத் தீர்மானத்துக்கு முற்றிலும் மாறானவை எனச் சுட்டிக் காட்டுவார் எனவும் அறியவந்தது. (உ)

## கடலட்டை பிடிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் அவருடன் இணைக்கப்பட்டிருந்த கயிற்றை மேலே இழுத்தபோது அவரைக் காணவில்லை என்று படகில் இருந்த ஏனையவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினரின் உதவியுடன் கடந்த இரு நாள்களாகத் தேடியும் அவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர் புத்தளம் – கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், குடாரப்பு கடற்கரையில் வாடியமைத்து தங்கியிருந்து கடலட்டை பிடித்துவரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்களில் ஒருவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# மக்களை ஒடுக்கினால் நீதிமன்றை நாடுவோம்

## அரசுக்கு ரணில் எச்சரிக்கை



அரசால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மக்களை ஒடுக்குவதற்கான ஒழுங்கு விதிகள் கொண்டுவரப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், அதன்மூலம் மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும்.

தற்போது அரிசியைத் தவிர மற்றைய அனைத்துப் பொருள்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அவ்வாறாகப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வியாபாரிகளிடம் தற்போது பணம் இல்லை – என்றார்.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தீபம் ஏற்றிக் கவனவீர்ப்பு



(எஸ்.நிதர்ஷன்)

குரலற்றவர்களின் குரல் அமைப்பால் தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தீபங்கள் ஏற்றப்பட்டன.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் – குருநகரிலுள்ள குரலற்றவர்களின் குரல் அமைப் பின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இருட்டுக்குள் இருக்கின்ற அரசியல் கைதிகளின் வாழ்வில் ஒளி யூட்டுவதைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

# அடுத்த மாதம் மேலும் 40 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் இலங்கைக்கு

## பாடசாலை மாணவர்களுக்கு ஒதுக்கத் திட்டம்



எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 40லட்சம் பைஸர் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெறவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன நேற்று தெரிவித்தார்.

மேற்படி தடுப்பூசிகளை பாடசாலை மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். நிபுணர் குழுவின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும் தடுப்பூசி திட்டம் ஆரம்பமாகும்.

அத்துடன் விசேட தேவையுடைய மற்றும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கும் தடுப்பூசி பயன்படுத்தலாம் என்ற பரிந்துரை கிடைத்துள்ளது. அடுத்த வாரம் முதல் அதற்கான திட்டம் ஆரம்பமாகும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

# 1,579 பேர் பூரண குணமடைவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகள் மற்றும் கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலும் 1,579 பேர் பூரணமாக குணமடைந்து வெளியேறி யுள்ளனர் என்று சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை 4 லட்சத்து 12 ஆயிரத்து 812 தொற்றாளர்கள் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்றிரவு வரை 4 லட்சத்து 83 ஆயிரத்து 280 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 11 ஆயிரத்து 152 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தோட்ட மக்களுக்கு வலிகளை கொடுத்து இன்பம் காணுகின்றது தற்போதைய அரசு

## எம்.உதயகுமார் எம்.பி. வேதனை



மலையக பெருந்தோட்ட மக்களுக்கு வலிகளைக் கொடுத்துவிட்டு, அந்த வலியில் இன்பம் காண்கின்றது தற்போதைய அரசாங்கம். இவ்வாறான துரோக நடவடிக்கைகளுக்கு மலையகத்தில் உள்ள ஆளும் கட்சியும் துணை நிற்கின்றது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கொவிட் வைரஸின் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு ஒரு தொகை சுவாசக் கருவிகள் மற்றும் முகக்கவசங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமாரின் சொந்த நிதியின் கீழ் இந்தப் பொருள்கள் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டதன் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மேலும் பல பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்நிலையில் மக்களை மேலும் சிக்கலுக்குள் தள்ளும் வகையில் வர்த்தமானி அறிவித்தல்களும் வெளிவருகின்றன. இந்த அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை.

அதனால் தான் மாறி, மாறி வர்த்தமானி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கு இன்று வருமானம் இல்லை. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

சீனி விலை அதிகரிப்பு, கோதுமை மாவின் விலை அதிகரிப்பு என மக்களைப் படுபாதாளத்துக்குள் தள்ளும் வகையிலேயே விலை அதிகரிப்புகள் இடம்பெறுகின்றன.

மேலும் 623 இற்கும் மேற்பட்ட பொருள்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் மேலும் பாதிக்கப்படக்கூடும். நுவரெலியாவில் மரக்கறி உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஆனால் இங்கு மரக்கறி வகைகளின் விலைகள் அதிகம். மலையக பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள காணிகள் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்படும் என நாம் அன்று குறிப்பிட்டோம்.

இன்று விற்கப்படுகின்றது. பால் பண்ணை எனக் கூறியே விற்கப்படுகின்றது. பால் பண்ணை அமைப்பதற்குப் பல பகுதிகள் உள்ளன.

அப்படி இருந்தும் மலையகம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? எமது மக்களைக் காணி உரிமையற்றவர்களாக்குவதே இதன் நோக்கம். இந்தத் துரோகத்துக்கு மலையகத்தில் உள்ள ஆளும் கட்சியும் துணை நிற்கின்றது. தோட்ட உட்கட்டமைப்பு பிரதமர் வசம் இருக்கின்றது.

அதன்மூலம் உரிமைகள் வென்றெடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் கூறினார். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? உரிமைகள் பறிக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் மத்திய மாகாண உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளருமான சோ.ஸ்ரீதரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட வைத்தியசாலையின் சார்பாக மாவட்ட உதவி வைத்திய அதிகாரி ஜே.அருள்குமரன் வைத்தியசாலையின் நிர்வாக உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# முகப்புத்தக பதிவு தொடர்பில் மாணவன் சி.ஐ.டிக்கு அழைப்பு

17 வயதான பாடசலை மாணவன் ஒருவன், கொழும்பிலுள்ள சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்துக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

முகப்புத்தகத்தில் அவரால் இடப்பட்டதாக கூறப்படும் பதிவொன்று தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக அவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார் என அறியமுடிகிறது.

குருணாகலை, வாரியபொல – கும்புக்கெட்டே பகுதியைச் சேர்ந்த 17 வயதான மணவன் ஒருவரே இவ்வாறு எதிர்வரும் 15 ஆம் திகதி சி.ஐ.டியில் ஆஜராக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளவராவார்.

சாலிய கனுகல எனும் குறித்த மாணவன் மிஹியா எனும் பெயரைக் கொண்ட தனது முகப்புத்தக பதிவில் இட்ட பதிவொன்று தொடர்பிலேயே இவ்வாறு விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என அறிய முடிகிறது.

## வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தை யொட்டி காலைக்கதிர் நடாத்திய மாபெரும் சைவசமய அறிவுப் போட்டி - 2021

மேற்படி போட்டியில் பெருமளவிலானவர்கள் ஆர்வத்துடன் பதில்களை அனுப்பி வைத்திருக்கின்றனர். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் நேற்றைய தினம் வெளியிடப்படவில்லை.

வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் எதிர்வரும் 20.09.2021 திகதி காலைக்கதிர் காலை இதழில் வெளியிடப்படும்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2021 இல் வெளியிடப்பெற்றது.